## கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

# பல்கலைக்கழக அனுமதிக்கான உளச்சார்புப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல்
# 2024/2025 கல்வி ஆண்டு
# (2024 க.பொ.த. உ/த பெறுபேறு அடிப்படையில்)

- கட்புலக் கலைகள் கௌரவ இளமாணி
- அரங்கேற்றக் கலைகள் கௌரவ இளமாணி (இசை/ நடனம் மற்றும் நாடகம்)

மேல் குறிப்பிடப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்கான அனுமதிக்கு தேவையான உளச்சார்புப் பரீட்சைக்கு 2025.05.16 ஆம் திகதி தொடக்கம் 2025.05.30 ஆம் திகதி வரை கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2024/2025 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச அனுமதித் தேவைகளை அபேட்சகர்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அனைத்து பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளும் தொடர்புடைய உளச்சார்புப் பரீட்சைகளும் சிங்கள மொழியில் மாத்திரமே நடத்தப்படும் என்பதை கருத்திற்கொள்ளவும்.

01. குறைந்தபட்ச நுழைவு தேவைகள்

அபேட்சகர்கள் க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் மூன்று பாடங்களில் பின்வரும் பெறுபேற்றை பெற்றிருத்தல் வேண்டும்.

- எந்த ஒரு இரு பாடங்களில் குறைந்தது இரு (2) சாதாரண சித்திகள் (S), மற்றும்
- அவர்கள் கற்பதற்கு எதிர்பார்க்கும் பாடத்தில் (இசை, நடனம், நாடகம் மற்றும் அரங்கியல், கலை மற்றும் சிற்பம்) குறைந்தது திறமைச் சித்தியை (S) பெற்றிருத்தல் வேண்டும்.
- முக்கியம்:

  அனைத்து அபேட்சகர்களும் கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு மேலதிகமாக, 2024/2025 கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு தனியே விண்ணப்பித்தல் வேண்டும்.

2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. (உயர் தர) பரீட்சையின் முடிவுகளின் மீளாய்வுக்கு விண்ணப்பித்துள்ள அல்லது பெறுபேறு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள அபேட்சகர்கள் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

02. விண்ணப்பிக்கும் முறை

www.vpa.ac.lk என்ற பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசித்து "Aptitude Test – 2024/2025" என்ற பிரிவுக்குச் சென்று ஒன்லைனில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்.

03. கொடுப்பனவு முறை

கற்கை ஒன்றுக்கு 2,000 ரூபா உளச்சார்புப் பரீட்சைக் கட்டணத்தை கொழும்பு 07, இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்க கிளையில் 84072227 என்ற கணக்கு இலக்கத்திற்கு கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு செலுத்துதல் வேண்டும். கொடுப்பனவை இலங்கை வங்கியின் எந்த ஒரு கிளையிலும் மேற்கொள்ள முடியும். கொடுப்பனவை மேற்கொள்ளும்போது வங்கி ரசீதில் அபேட்சகர்கள் தமது முழு பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். ரொக்கப்பண வைப்பு இயந்திரங்கள் (CDM) மூலமான கொடுப்பனவுகள் ஏற்கப்படமாட்டாது.

2024 க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் இரு அழகியல் பாடங்களுக்காக தோற்றி இரு பாடங்களுக்காகவும் உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் அபேட்சகர்கள் தனித்தனியே விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொரு பாடத்திற்காகவும் தனித்தனியே கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. எதிர்காலத்தில் தேவைப்பட்டால் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்க பின்வரும் ஆவணங்களின் அசலை அபேட்சகர்கள் வைத்திருத்தல் வேண்டும்: (i) வங்கிக் கொடுப்பனவு ரசீது (ii) தேசிய அடையாள அட்டை, (iii) விண்ணப்பத் திகதியில் இருந்து ஆறு மாதத்திற்குள் எடுக்கப்பட்ட நீல நிற பின்னணியைக் கொண்ட அபேட்சகரின் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் (iv) 2024 - க.பொ.த. (உ/த) முடிவுத் தாள்.

05. தவறான தகவலுடன் முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதிக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில், அபேட்சகர் மேற்கொண்ட கொடுப்பனவு மீளளிக்கப்படமாட்டாது.

06. அனுமதிச் சீட்டு பெறுவது தொடர்பிலான விபரங்கள் விண்ணப்பப் படிவத்தில் தரப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அறியத்தரப்படும்.

07. அறிவுறுத்தல்கள்/ வழிகாட்டல்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் (www.vpa.ac.lk) "Aptitude Test – 2024/2025" ஐ பார்க்கவும்.

விசாரணைகள் - சிரேஷ்ட உதவி பதிவாளர்/ கல்வி மற்றும் மாணவர் விவகாரங்கள்

011-2026784/ 011-2033710-1003/1004/1005

**பதிவாளர்**
**கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்.**

2025.05.16